**நாள் 08.03.2023**

**OS 147/2019 வா.சா1 சகாயராணி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

என் அம்மா புளோரா வேலைக்கு போகவில்லை 2, 3 மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்தார். தஞ்சாவூர் ஹவுசிங் யூனிட்டில் மாடு வைத்து பால் வியாபாரம் செய்தார். ஹவுசிங் யூனிட் என்பது அரசு குடியிருப்பு அல்ல. அது தனி குடியிருப்பு. ஹவுசிங் யூனிட் என்பது அரசு குடியிருப்பு என்றால் நாங்கள் ஹவுசிங் யூனிட்டில் தனியாக மனை இடம் வாங்கி வீடு கட்டினோம். மொத்த இடம் 2400 சதுரடி அதில் வீடு எவ்வளவு சதுரடி என்று தெரியாது. அந்த வீட்டில்தான் என் அம்மா மாடு கட்டி வளர்த்தார். ஹவுசிங் யூனிட் மாடு வளர்க்க தடை செய்யப்பட்ட பகுதி என்றால் நாங்கள் அடுக்ககத்தில் இல்லை. என் அம்மா ஹவுசிங் யூனிட்டில் வசித்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்திருக்கிறோம். என் அம்மா மாடு வளர்த்து பால் வியாபாரம் செய்தார் என்ற விவரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பா மரியாதாஸ் போலிசாக இருந்தார். தஞ்சாவூரில் விஜிலன்ஸ் போலிசாக இருந்தார். போலிசார் குடியிருப்பதற்கு தனியாக காவலர் குடியிருப்பு உள்ளது. என் அப்பா பணி ஓய்வு பெறுவதற்கு 10 வருடங்களுக்கு முன்பு வரை காவலர் குடியிருப்பில்தான் இருந்தோம். வழக்கு சொத்து எத்தனை சதுரடி என்று தெரியாது. வழக்கு சொத்தில் தரைத்தளமும், முதல்தளமும் தரைத்தளத்தில் 4 கடைகளும் உள்ளது. கடைகளுக்கு முன்பு ஷெட் எதுவும் இல்லை. வழக்கு சொத்தை என் தாயார் என் தாத்தா கொடுத்த ரூ.7000/-த்தை வைத்து கிரயம் வாங்கினார் யாரிடம் இருந்து வாங்கினார் என தெரியாது. 1982 ம் ஆண்டு அந்த கிரயம் வாங்கினார். அடிமனை மட்டும்தான் கிரயம் வாங்கினார். என் அம்மா கூட்டுறவு சொசைட்டியில் கடன் வாங்கி தரைத்தளம், முதல்தளம் ஆகியவலற்றை வெவ்வேறு சமயங்களில் கட்டினார். கூட்டுறவு சொசைட்டி கடன் முடிந்துவிட்டது. அதற்கு ஆவணம் வைத்திருக்கிறேன். என் சகோதரர் வில்சென் 2 ம் பிரதிவாதிதான் என் அம்மாவிற்காக கூட்டுறவு கடன்களை தீர்த்திருக்கிறார் என்றால் இல்லை. 2 ம் பிரதிவாதி ஷார்ஜியாவில் 2 வருடங்கள் இருந்துவிட்டு வந்தார். 1991 ம் ஆண்டுதான் ஷார்ஜியா போனார். 1992 ம் ஆண்டு எனக்கு திருமணம் ஆனது. நான் 3 வது மகள். 2 ம் பிரதிவாதி ஷார்ஜியா போனபோது

நாங்கள் கூட்டுக்குடும்பமாகத்தான் இருந்தோம். திருமணம் ஆன பிறகு நான் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். வீடு கட்டியதற்கான செலவு கணக்குகள் என்னிடம் இருக்கிறது. வழக்கு சொத்தை என் அம்மா பெயரில் 2ம் பிரதிவாதிதான் வாங்கினார் என்றால் சரியல்ல அப்போது அவர் படித்துகொண்டு இருந்தார். 2ம் பிரதிவாதிதான் என் அம்மா பெயரில் சொசைட்டியில் லோன் போட்டு கட்டினார் என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரம் பெயரளவுக்குஏற்பட்டது தான் என்றும் உண்மையான உரிமையாளர் 2ம் பிரதிவாதி என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதிகள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினார்கள். அதனால்தான் பிரதிவாதிகள் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் ஆமாம். வழக்கு சொத்து 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதால் எனக்கும் மற்ற சகோதர சகோதரிகளுக்கும் பாகம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதால் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் பாகம் கோரவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஆனால் என் அக்கா பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். வழக்கு சொத்தில் நான் கோரியுள்ள 1/5 பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றும்1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்குமூலம் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.